விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 17 வியாழன் 01.07.2021 மலர் - 2, இதழ் - 86

# விஷ்வ ஹிந்து பரிஷத் கோரிக்கை

உத்தர பிரதேசத்தில், சமீபத்தில் உடல் ஊனமுற்றவர்கள், ஏழைகள், ஆதரவற்றவர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை முஸ்லிம் அமைப்பினர் ஏமாற்றி, ஆசை காட்டி மதமாற்றம் செய்த சம்பவம் வெளியாகி நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. மேலும், தேசத்தின் பல்வேறு இடங்களில் சிறுமியர், பெண்கள் ஏமாற்றப்பட்டு, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு திருமணம் என்ற பெயரில் மதமாற்றம் செய்யப்படுகின்றனர். கொரோனா பொதுமுடக்க காலத்தில் சேவை என்ற பெயரில் வெளிநாடுகளில் இருந்து கிறிஸ்தவ மிஷனரிகளும் முஸ்லிம் அமைப்புகளும் ஏராளமான நிடியுதவி பெற்று, அதனை மதமாற்றத்திற்காக பயன்படுத்துகின்றனர். இதற்கு பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ, பாரதத்தில் உள்ள 'டூல் கிட்' கும்பல்கள் உட்பட பல வெளிநாட்டு, உள்நாட்டு சக்திகளும் உதவி புரிகின்றன. எனவே, லவ் ஜிஹாத், ஏமாற்றுதல், கட்டாயப்படுத்துதல் என அனைத்து வகையிலும் இவர்கள் மக்களை மதமாற்றம் செய்வதை தடுக்க, நியோகி கமிஷன் இதனை விசாரிக்க வேண்டும். நியோகி கமிஷன், வேணுகோபால் கமிஷன் பரிந்துரைத்த மதமாற்றத் தடை சட்டத்தை நாடு முழுவதும் அமல்படுத்த வேண்டும், தேசம் மதத்தின் பெயரால் பிளவு படாமல் காக்க வேண்டும் என விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு தன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளது.

VISHVA HINDU PARISHAD

விஜயபாரதம்

# அ.ம.மு.க. போலி மருத்துவர் கைது

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் போலி மருத்துவர்கள் பொதுமக்களுக்கு சிகிச்சை அளிப்பதாக மாவட்ட ஆட்சியருக்கு பல புகார்கள் வந்தன. இதனை அடுத்து மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில், மருத்துவக் குழுவினர், சாணார்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அய்யாபட்டி பகுதியில் காளியப்பன் என்பவர் தன் வீட்டில் கிளினிக் வைத்து சிகிச்சை அளித்து வந்தது தெரியவந்தது. விசாரணையில் அவர் முறையாக மருத்துவம் படிக்காமல் சிகிச்சை அளித்து வந்தது கண்டறியப்பட்டது. இதனை அடுத்து கிளினிக்குக்கு சீல் வைத்து போலி மருத்துவர் காளியப்பனை கைது செய்தனர். காளியப்பன் அ.ம.மு.க தெற்கு ஒன்றிய செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.



விஜயபாரதம்


# மாமூல் அராஜகம் செய்யும் தி.மு.க. கவுன்சிலர்



விஜயபாரதம்

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை ஒன்றியத்திற்கு உட்பட்ட அந்தரபுரம், திடல் ஆகிய பகுதிகளின் ஊராட்சி மன்ற தலைவர்கள் நூறுக்கும் மேற்பட்ட அப்பகுதி பொதுமக்களுடன் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று புகார் அளித்தனர். அந்த புகாரில், 'தோவாளை ஒன்றிய தி.மு.க கவுன்சிலர் பூதலிங்கம்பிள்ளை மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் பஞ்சாயத்து அலுவலக நிதி சார்ந்த விவகாரத்தில் தலையிட்டு மாமூல் கேட்டு தங்களை பணி செய்ய விடாமல் தொடர்ந்து தொந்தரவு செய்கின்றனர். திடல், தெள்ளாந்தி, அந்தரபுரம் ஆகிய பகுதிகளில் கட்டப்பஞ்சாயத்தில் ஈடுப்பட்டு வருகின்றனர். அங்கு ஆளும் கட்சியின் பிரதிநிதிகளாக தங்களை காட்டிக்கொள்கின்றனர். அவர்கள் மீது ஏற்கனவே ஊர்மக்களை மிரட்டியது, பஞ்சாயத்து தலைவர் ராஜலட்சுமியை தாக்கியது சம்பந்தமாக பூதப்பாண்டி காவல் நிலையத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. என புகார் அளித்துள்ளனர். மேலும், பஞ்சாயத்து தலைவர்களுக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது. இது தொடர்பாக தமிழக முதல்வர் ஸ்டாலினின் கவனத்திற்கு எடுத்து செல்ல வேண்டும். தி.மு.கவினர் தங்களின் பஞ்சாயத்து அலுவலக பணியில் தலையிடுவதை கண்டிக்க வேண்டும். தாங்கள் அளித்த மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்துள்ளதாக தெரிவித்தனர்.

# கோயில் நிலம் பட்டா கிடையாது



விஜயபாரதம்

ஹிந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், 'திமுக பதவியேற்ற கடந்த 55 நாட்களில் தமிழகம் முழுவதும் கோயில்களுக்கு சொந்தமான ரூ. 520 கோடிக்கு மேலான 79 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுள்ளது. கோயில் நிலங்களை ஆக்கிரமித்தவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். கோயில் இடங்களில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு பட்டா வழங்க முடியாது. கோயில் இடங்களில் உள்ள கடைகள் குறித்து மறுபரிசீலனை செய்து புதிதாக வாடகைக்கு விடப்படும். அறநிலையத் துறையில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிவரும் தற்காலிகப் பணியாளர்களை, பணி நிரந்தரம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என கூறினார். ஆனால், 'கோயில் நில ஆக்கிரமிப்பு அகற்றம், கோயில் நிலங்கள் கோயிலுக்கே சொந்தம், அதற்கு பட்டா போட்டு தரக்கூடாது போன்றவை உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற உத்தரவுகளின் படியே நடக்கின்றன. இதில் தமிழக அரசின் பங்கு ஏதும் இல்லை. அவர்கள் உத்தரவை மட்டுமே செயல்படுத்துகின்றனர். ஆனால், தாங்களே ஏதோ முயன்று பெரிதாக சாதித்தது போல பாசாங்கு செய்கின்றனர்' என இணையதளத்தில் நெட்டிசன்கள் கருத்து தெரிவித்து வருகினனர்.

# கோவேக்சின் செயல் திறன் உறுதி



விஜயபாரதம்

அமெரிக்காவின் தேசிய சுகாதார நிறுவனம் (என்.ஐ.எச்) வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பாரதத்தின் உள்நாட்டுத் தயாரிப்பான, பாரத் பயோ டெக் நிறுவனம் தயாரிக்கும் 'கோவாக்சின்' தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் ரத்த மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதில், கோவாக்சின் தடுப்பூசி ஆல்பா, டெல்டா வகை கொரோனா வைரஸ்களை தடுக்கும் ஆன்டிபாடிகளை உருவாக்குவது கண்டறியப்பட்டு உள்ளது. இது, உடலில் நோயெதிர்ப்பு மண்டலத்தை தூண்டுகிறது. கோவிட் வைரசின் உருமாற்றமடைந்த வைரஸ்களுக்கு எதிராக ஆன்டிபாடிகளை திறம்பட உருவாக்குகிறது' என தெரிவித்துள்ளது.

# தமிழக அரசுக்கு எடப்பாடி கேள்வி

எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி சேலத்தில் செய்தியாளர்களை சந்தித்த போது, 'பெட்ரோல், டீசல் விலை உயர்வை குறைப்பதாக தேர்தல் வாக்குறுதியாக தி.மு.கவினர் கொடுத்தார்கள். ஆனால் விலை குறைக்கப்படவில்லை. பெட்ரோல், டீசல் விலை, சிமெண்ட், ஜல்லி, கம்பி, எம். சாண்ட் உள்ளிட்ட பல்வேறு கட்டுமானப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. கட்டுமானத் தொழிலை நம்பி லட்சக்கணக்கான மக்கள் இருக்கின்றனர். தேர்தலில் வாக்குறுதி அளித்தது போல திமுக அரசு விலையேற்றத்தை கட்டுப்படுத்த வேண்டும். குறைந்த விலையில் அம்மா சிமெண்ட் வழங்குவதை தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழகத்தின் பல்வேறு இடங்களில் தடுப்பூசி தட்டுப்பாடு ஏற்படுவதாக செய்தி வருகிறது. அதனை மத்திய அரசிடம் முறையாக கேட்டு பெற வேண்டும். நீட் தேர்வு நடக்குமா நடக்காதா என்பதை தமிழக அரசு தெளிவுபடுத்த வேண்டும். நாட்டில் விஞ்ஞானம் வளர்ந்துள்ள நிலையில், மின்வெட்டுக்கு அணில் மீது பழிபோடுவதை ஏற்கமுடியாது' என கூறினார்.



விஜயபாரதம்

# குற்றவாளிகளுக்கு ஜாமீன்


விஜயபாரதம்

கடந்த 2020 ஏப்ரல் 16 அன்று, மகாராஷ்டிர மாநிலம் பால்கரில், ஜூனா அகாராவை சேர்ந்த சாதுக்களான சிக்னே மகாராஜ் கல்பவ்ருக்ஷகிரி மற்றும் சுஷில்கிரி மகாராஜ் மற்றும் அவர்களது வாகன ஓட்டுநர் ஆகியோரை ஒரு கும்பல் கற்கள், கட்டைகள், கோடரிகளால் கொடூரமாக தாக்கிக் கொன்றனர். அந்த அப்பாவி சாதுக்களை அந்த பயங்கரவாத கும்பலிடம் இருந்து காப்பதற்கு பதிலாக, வேடிக்கை பார்த்தனர் மகாராஷ்டிரா காவல்துறையினர். இந்த கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 14 பேருக்கு தானே நீதிமன்றம் ஜாமீன் வழங்கியுள்ளது. 14 பேருக்கு ஜாமீன் வழங்கப்பட்டாலும், குற்றத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட மற்ற 18 பேருக்கு ஜாமீன் வழங்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

# வலைதளங்களை பயன்படுத்தும் பயங்கரவாதிகள்



விஜயபாரதம்

பாரதத்தின் வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வி ஷ்ரிங்லா ஜூன் 29ல் நடைபெற்ற ‘சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பராமரித்தல்: சைபர் பாதுகாப்பு’ குறித்த ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் திறந்த விவாதத்தில் உரையாற்றினார். அப்போது, ‘பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளில் பாரதமும் ஒன்று. பயங்கரவாதிகள் தங்கள் பயங்கரவாத தாக்குதல்களைத் திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் சமூக ஊடகங்களையே பயன்படுத்துகின்றனர். வளர்ந்துவிட்ட இந்த சைபர் களத்தில், பயங்கரவாத தாக்கங்களை தடுக்க உலகளாவிய அளவில் ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவை. இதனை பலமுறை பாரதம் வலியுறுத்தியுள்ளது. கொரோனா தொற்று, டிஜிட்டல் மயமாக்கலை விரிவுபடுத்தியுள்ளது. இணையவழி தாக்குதலில் குழந்தைகள் எளிதில் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, குழந்தைகள் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு ஆகியவற்றை செயல்படுத்துவதில் இன்னும் ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவை எனினும், இணையம் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் அதிகரித்துவரும் பயன்பாடு, பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்தியுள்ளது. அதிக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது’ என கூறினார்.

# நிலைக்குழு விசாரணை

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சஷி தரூர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில் நுட்பம் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழு, கூகுள், முகநூல், டுவிட்டர் உள்ளிட்ட சமூக ஊடகங்கள், ‘டிஜிட்டல் தளங்களில் குடிமக்கள் உரிமைகளை பாதுகாத்தல், ஊடகங்களை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுத்தல், பெண்கள் பாதுகாப்புக்கு சிறப்பு முக்கியத்துவம்’ உள்ளிட்டவற்றில், அரசு வழிகாட்டுதலின்படி எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பதை விசாரித்து வருகின்றன. கொரோனாவை முன்னிட்டு நேரடி விசாரனைக்கு வர மறுத்த முகநூல் அதிகாரிகள், நிலைக்குழுவின் எச்சரிக்கையை அடுத்து நேரில் ஆஜராகினர். இதில் கூகுள், முகநூல் பிரதிநிதிகள் கலந்துகொண்டு



விஜயபாரதம்

உரிய விளக்கங்கள் அளித்தனர். ஆனால், டுவிட்டர், தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்ததோடு, கேள்விகளுக்கு திருப்திகரமான விளக்கம் அளிக்கவில்லை என தன் அதிருப்தியை நாடாளுமன்ற நிலைக்குழு தெரிவித்துள்ளது.

# முஸ்லிம் தலைவர்களுக்கு கோரிக்கை


விஜயபாரதம்

பாரதீய ஜனதாவின் விளம்பர இலக்கியத் துறையின் இணை பொறுப்பாளரான விகாஸ் ப்ரீதம் சின்ஹா, தனது டுவிட்டர் பதிவில், ‘கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு அரபு மொழி தெரியாது. ஆனால், நாடு முழுவதும் லட்சக்கணக்கான மசூதிகளில் இருந்து ஒரு நாளைக்கு ஐந்து முறை அஸான் அரபியில் ஓதப்படுகிறது. அஸானை இந்திய மொழிகளில் பாராயணம் செய்ய ஏற்பாடு செய்யுமாறு அரசாங்கத்தையும் முஸ்லீம் மதகுருக்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன், இதன் மூலம் அதன் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் மக்கள் அறிந்து கொள்ள முடியும்’ என ஒரு கோரிக்கை வைத்துள்ளார்.

# தவிர்க்க முடியாத உலகத் தலைவர் மோடி

இங்கிலாந்தில் மேற்கு யார்க்ஷயரில் நடைபெற உள்ள இடைத் தேர்தலுக்காக, பேட்லி, ஸ்பென் பகுதிகளில் வினியோகிக்கப்பட்ட துண்டு பிரசுரங்களில், ஆளும் கன்சர்வேடிவ் கட்சியை சேர்ந்த, பிரதமர் போரிஸ் ஜான்சனுடன் பாரதப் பிரதமர் மோடி, கடந்த 2019ல் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டில் கைகுலுக்கிய புகைப்படம் இடம் பெற்றது. சமூக ஊடகங்களில், இதற்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் பல்வேறு கருத்துகள் எழுந்தன. அந்த நாட்டில் உள்ள பெரும்பாலானவர்கள் இதனை ஆதரித்தாலும், எதிர்கட்சியான தொழிலாளர் கட்சி, தோல்வி பயத்தால் இதனை கடுமையாக எதிர்த்தது. இங்கிலாந்தில், புலம்பெயர்ந்த பாரதவாசிகள் 15 லட்சத்திற்கும் அதிகமானோர் வசிக்கின்றனர் என்பதும் அவர்களின் ஓட்டு அங்கு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தவல்லது என்பதும் குறிப்பிடத்தக்கது.



விஜயபாரதம்

# எஸ்.சி.ஓ.விற்கு நூல் பரிசளிப்பு

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பான எஸ்.சி.ஓவில் பாரதம், சீனா, ரஷியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், பாகிஸ்தான் ஆகியவை உறுப்பு நாடுகளாக உள்ளன. பெய்ஜிங்கில் உள்ள எஸ்.சி.ஓவின் தலைமையகத்தில், நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜெயகாந்தனின் 'சிலநேரங்களில் சில மனிதர்கள்' (தமிழ்), தாராசங்கர் பந்தோபாத்யாய எழுதிய 'ஆரோக்ய நிகேதன்' (வங்க மொழி), ராஜேந்திர சிங் பேடியின் 'ஏக் சதர் மைலி ஸி' (உருது), ரச்சகொண்டா விஸ்வநாத சாஸ்திரியின் 'இல்லு' (தெலுங்கு), நிர்மல் வர்மாவின் 'கவ்வே அவுர் காலா பானி' (ஹிந்தி), மனோஜ் தாஸ் எழுதி ஒடியா சிறுகதைகள், குர்தயாள் சிங்கின் 'மரீ த தீவா' (பஞ்சாபி), எஸ்.எல். பைரப்பா எழுதிய 'பர்வ' (கன்னடம்), ஜாவேர்சந்த் மேக்னானி எழுதிய 'வேவிஷால்' (குஜராத்தி), சையத் அப்துல் மாலிக்கின் 'சூர்ய முகீர் ஸ்வப்னா' (அஸ்ஸாமி) ஆகிய நூல்களின் சீன, ரஷிய, ஆங்கில மொழிபெயர்ப்புகள் பரிசளிக்கப்பட்டன. எஸ்.சி.ஓவின் பொதுச் செயலர் விளாடிமிர் நோரோவிடம் சீனாவுக்கான இந்திய தூதர் விக்ரம் மிஸ்ரி இதனை வழங்கினார். அப்போது, 'இந்த நூல்களால் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகளுக்கு இடையேயான கலாசார உறவு வலுப்படும்' என நம்புவதாக கூறினார்.

விஜயபாரதம்



# ஐ.நா.சபையில் பாரதம் எச்சரிக்கை

ஐ.நா சபையில், 'பயங்கரவாதத்தால் உலகம் சந்திக்கும் சவால்கள்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் கலந்துகொண்டு பேசிய மத்திய உள்துறை அமைச்சகத்தின் உள்நாட்டு பாதுகாப்புக்கான சிறப்பு செயலர் வி.எஸ்.கே. கமுடி, 'நவீன தொழில்நுட்பங்கள் தவறான செயல்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன. சமூக வலைதளங்கள், பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் தளங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. ஆயுதம் தாங்கிய ட்ரோன்களை பயன்படுத்தி பயங்கரவாதிகள் கொடூர தாக்குதல்கள் நடத்த அதிக வாய்ப்பு உள்ளது. இதில் உலக நாடுகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பயங்கரவாதத்தை, 'வீடியோ கேம்' வழியாக, பயங்கரவாதிகள் பரப்பி வருகின்றனர். பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்களை புறக்கணிக்க வேண்டும். பயங்கரவாதம், ஒரு நாட்டுக்கான பிரச்னையல்ல, உலகிற்கே எதிரானது' என தெரிவித்தார்.



விஜயபாரதம்

---

# அதிர்ச்சி தரும் உண்மை கண்டறியும் குழு அறிக்கை

மேற்கு வங்கத்தில் தேர்தலுக்குப் பிந்தைய வன்முறைகள் குறித்து ஆராய அமைக்கப்பட்டது ஒரு உண்மை கண்டறியும் வகையில் சிக்கிம் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி பெர்மோட் கோஹ்லி தலைமையிலான ஐந்து பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் ஓய்வுபெற்ற இரண்டு ஐ.ஏ.எஸ் மற்றும் ஒரு ஐ.பி.எஸ் அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர். இக்குழு மேற்கு வங்கத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட 16 மாவட்டங்களில் மக்களை சந்தித்து விவரங்கள் சேகரித்தது.

அவர்கள் அறிக்கையை மத்திய உள்துறை இணை அமைச்சர் ஜி. கிஷன் ரெட்டி வெளியிட்டார். அதில், பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்த அறிக்கையில் உள்ள சில குறிப்புகள்:

15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்தன. 7 ஆயிரத்திற்கும் அதிகமான பெண்கள் துன்புறுத்தப்பட்டனர், 25 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது என அந்த அறிக்கை கூறுகிறது.

பல பயங்கர குற்றவாளிகள், மாஃபியாக்கள், தாதாக்கள் இந்த கும்பலை வழிநடத்தினர். அரசியல்வாதிகளின் ஆதரவு இதில் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. அரசியல் போட்டியாளர்களை பயமுறுத்த, மௌனமாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு

செயல்படுத்தப்பட்டது இந்த வன்முறை.

மேலும், மக்களின் சொத்துக்களை அழித்தல், குடியிருப்புகளை அழித்தல், வணிகத்தை அழித்தல் என மக்களின் வாழ்வாதாரத்தை பறித்து அவர்களை பொருளாதார ரீதியாக திணறடிப்பதும் இந்த வன்முறையின் நோக்கம்.

இதில் பாதிப்புக்குள்ளானவர்களில் பலர், கூலி வேலை சிறு வியாபாரம் போன்றவற்றை செய்பவர்கள். அவர்கள் தற்போது பயம், நிதிச்சிக்கல், உயிரிழப்பு உள்ளிட்ட பெரும் துயரங்களில் தள்ளப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான வழக்குகளில், பாதிக்கப்பட்டவர்கள் பழிவாங்கப்படுவோம் என்ற பயம், காவல்துறை மீதான நம்பிக்கையின்மையால் காவல்துறையில் இது குறித்து புகார் அளிக்க தயங்கினர்.

தைரியமாக புகார் அளிக்கச் சென்ற ஒரு சிலரது புகார்களையும் காவல்துறையினர் வாங்காமல் அலை கழித்தனர். குற்றவாளிகளுடன் சமரசம் செய்துகொள்ள வற்புறுத்தினர். பலர் தற்போதும் தங்கள் வீடுகளையும் கிராமங்களையும் விட்டு, மாநிலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பான இடங்கள், முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்த அறிக்கையை உச்சநீதிமன்றத்தில் வைக்க வேண்டும். இதில் அளிக்கப்பட்டுள்ள பெரிய அளவிலான, கணிசமான, உறுதியான ஆதாரங்களின் அடிப்படையில், உச்சநீதிமன்றம் உடனடியாக ஒரு சிறப்பு விசாரணைக் குழுவை (எஸ்.ஐ.டி) அமைக்க வேண்டும். அதன் விசாரணையை பதவியில் உள்ள ஒரு நீதிபதி அல்லது உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி மூலம் நியாயமான விசாரணை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும்' என அக்குழு தன் அறிக்கையில் கூறியுள்ளது.

உள்துறை அமைச்சகம் இந்த அறிக்கையை ஆய்வு செய்து அதன் பரிந்துரைகளை செயல்படுத்த முயற்சிக்கும் என்று கிஷன் ரெட்டி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

விஜயபாரதம்



# சர்வதேச நகைச்சுவை தினம்


விஜயபாரதம்

வாய் விட்டு சிரித்தால் நோய் விட்டுப் போகும்.சிரிக்க, சிந்திக்க தெரிந்தவனே மனிதன். சிரிக்க தெரியாதவன் மனித வடிவில் உள்ள மிருகம். இப்படிப்பட்ட சிரிப்பை கொண்டாடும் நாள் இன்று. நவரசங்களுல் ஒன்று நகைச்சுவை.

சிரிப்பும் மகிழ்ச்சியும் கூடிய உணர்வை தூண்டும் கலை வடிவங்கள் நகைச்சுவை. நகைச்சுவை மன இறுக்கம், மன உளைச்சல் போன்றவற்றில் இருந்து மீண்டு ஆரோக்கியமான உடல், மன நிலையைப் பேண உதவும். அதோடு வாழ்க்கையை இனிமையாக மாற்றுவதற்கான எளிய வழியும் இதுவே.

எனவே தான் வள்ளுவரும் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று நகைச்சுவை உணர்வின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். மனிதனின் மற்ற உணர்வுகளைக் காட்டிலும் அன்பினை வெளிப்படுத்தும் தன்மை அதிகமாக இருப்பது நகைச்சுவை உணர்வில் மட்டுமே.

இப்போதைய காலகட்டத்தில் வேலைப்பளு, குடும்பப் பிரச்சனை பொருளாதாரச் சிக்கல் போன்ற சூழ்நிலையில் இருந்து மனதை மாற்றிக்கொள்ள நகைச்சுவை பெரிதும் உதவுகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆரோக்கியமாகவும், புத்துணர்ச்சியுடனும் இருக்க நகைச்சுவை அவசியம் தேவை. இன்று நாம் அனைவரும் பரபரப்பான சூழ்நிலையில் சிரிக்க மறந்து எதையோ தேடி ஓடிக்கொண்டு இருக்கிறோம். ஆனால், சிரிக்க தெரிந்தால் உலகையும் மறந்து சிறகடிப்போம்.

ப.கமலயாழினி

# பட்டயக் கணக்காளர் தினம்



விஜயபாரதம்

ஜூலை 1, தேசிய பட்டயக் கணக்காளர் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. பட்டயக் கணக்காளர் என்பவர் கணக்கீடு, கணக்காய்வு, முகாமைத்துவ கணக்கீடு, குத்தகை, கூட்டிணைப்பு, வாணிப சட்டம், நிதி முகாமைத்துவம், பொருளியல் உள்ளிட்ட ஏனைய தொடர்புடைய விஷயங்கள் பற்றி சிறந்த அறிவுடைய கணக்கீட்டுத்துறையில் ஈடுபட்டுள்ள ஒரு தொழில் நிபுணர்.

தற்பொழுது பட்டயக் கணக்காளர்கள், அரசு மற்றும் தனியார் துறைகளில் மிக உயர்ந்த பதவிகளை வகிக்கின்றனர். பட்டயக் கணக்காளர்களுக்கு பொருளாதாரத்தை சீர்மை செய்யும் சிறப்பான பணி உள்ளது.

பட்டயக் கணக்காளர் என்பது உலகில் மிகவும் மதிப்புமிக்க படிப்புகளில் ஒன்று. அது ஒரு சவாலான படிப்பும்கூட. கடினமான தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும், எனவே ஒரு பட்டயக் கணக்காளராக ஆவது எளிதானது அல்ல. எனவேதான் நிதி மற்றும் தொழில் துறையில் பட்டய கணக்காளரின் தேவை இன்று உலக அளவில் மிக அதிகமாக உள்ளது.

சி.ஏ முடித்தவர்கள் ஒரு ஆடிட்டராக செயல்படலாம் அல்லது பெரிய நிறுவனங்களில் தலைமைக் கணக்காளர், உள் தணிக்கையாளர் உள்ளிட்ட பல பதவிகளை வகிக்கலாம். எனவே சி.ஏ படித்து முடித்தால் சிறப்பான எதிர்காலம் உண்டு.

ப. மகிரிஷன்

# மனித வடிவில் தெய்வம்



விஜயபாரதம்

மனிதர்களின் வாழ்க்கையில் மருத்துவர்களுக்கு உயர்வான இடம் உண்டு. நேரம் காலம் பார்க்காமல், ஓய்வின்றி உழைக்கக் கூடியவர்கள் மருத்துவர்கள். கொரோனா போன்ற கொள்ளை நோய் காலத்தில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் பணி செய்யும் மருத்துவர்களின் தியாகத்துக்கு ஈடு எதுவும் இல்லை.

மருத்துவத்துறையில் தகுந்த முன்னேற்றங்களைக் கண்டுள்ள பாரதம், இன்னும் மருத்துவர்களையே பார்த்திராத கிராமங்களுக்கும் சேவை அளிக்க விரைந்துள்ளது. மனித உயிர்களைக் காக்கும் அற்புதமான பணியை மேற்கொண்டு வரும் மருத்துவர்கள், அவர்களின் நலனிலும் அக்கறைக் கொள்ள வேண்டும். பாரதத்தில் மருத்துவர்களின் சராசரி வயது 55 முதல் 59 ஆண்டுகள். இது பொது மக்களின் ஆயுளை விட 10 ஆண்டுகள் குறைவு.

அதிக மன அழுத்தம், உடற்பயிற்சி இல்லாமை, உடல் பருமன், நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், ஒழுங்கற்ற சாப்பாட்டு வேளைகள் போன்றவை மருத்துவர்களின் ஆயுளைக் குறைத்து வருகிறது.

எனவே, தங்களுக்காக மட்டுமல்லாது, மற்ற உயிர்களை காப்பாற்றவேண்டும் என்ற பொதுநலனும் அடங்கி இருப்பதால், மருத்துவர்கள் தங்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியம். இதை ஆழமாக வலியுறுத்தி மருத்துவர்களுக்கு நமது வாழ்த்துகளைத் தெரிவிப்போம். நாம் பார்க்கும் மருத்துவர்களிடம் அன்பையும் நன்றியையும் பகிர்ந்து கொள்வோம்.

ப. மாங்குயில்

# ஜி.எஸ்.டி




விஜயபாரதம்

ஜி.எஸ்.டி என்பது மறைமுக வரியின் ஒரு வடிவம். இது இந்திய சந்தையை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டது. முழு நாட்டிற்கும் ஒரே வரியாக செயல்படும். உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்கு அனைத்து பொருட்கள், சேவைகளை வழங்குவதில் ஜி.எஸ்.டி பயன்படுத்தப்படும். ஜி.எஸ்.டி இந்தியாவில் வரி கட்டமைப்பை தரப்படுத்துவதற்கான ஒரு குறிக்கோளுடன் செயல்படுத்தப்படுகிறது. ஜி.எஸ்.டி, நாடு முழுவதும் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வது, நடுநிலை செயல்முறையாக மாற்றும். இது பொதுவான வரி விகித அமைப்பு. எனவே, எந்த இடத்திலும் வணிகத்தைத் தொடங்க அனைவரையும் அனுமதிக்கிறது. இந்த வரிவிதிப்பு முறை, வரியின் அடுக்கு விளைவை நீக்குகிறது. இது, வணிகம் செய்வதற்கான மறைக்கப்பட்ட செலவுகளை குறைக்கிறது. நாடு முழுவதும் ஒரே மாதிரியான வரி விகிதம் என்ற அமைப்பைக் கொண்டு, திறமையான தகவல் தொழில்நுட்ப அமைப்பின் ஆதரவுடன், வரிவிதிப்பு முறையை நிர்வகிக்கும் பணியை எளிமைப் படுத்துகிறது. வரிகளில் ஒரு விரிவான சோதனை, அர்ப்பணிப்பு, தகவல் தொழில்நுட்ப அமைப்புகளுடன் தொடர்ந்து கண்காணித்தல் போன்றவை, வரிகளில் இணங்காதது எளிதில் பிடிபடுவதை உறுதி செய்கிறது. ஆன்லைன் வரிவிதிப்பு முறை காரணமாக, வரி வசூலிக்கும் செலவும் கணிசமாகக் குறையும். கருப்பு பணம், கள்ளச் சந்தை வியாபாரம் பெருமளவு குறைய வழி செய்தது இந்த வரிவிதிப்பு.

கோ. பழனிவேல்